பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 தை 28 வெள்ளிக்கிழமை 11.02.2022 கதிர் 324

## தேர்தலை ஒத்திவைக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை

### அமைச்சர் நாமல் தெரிவிப்பு

தேர்தலை ஒத்திவைக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை. கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே நிச்சயம் தேர்தல் நடத்தப்படும். அதனை எதிர்கொள்வதற்கு நாம் தயார் என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

குருநாகலில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர்

☞ 2

# வவுனியா பல்கலைக்கழகத்தைத் திறந்துவைத்தார் ஜனாதிபதி



### வவுனியா பல்கலையில் ஜனாதிபதி உரை

(வவுனியா நிருபர்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டிருந்த வவுனியா வளாகம், 'வவுனியா பல்கலைக்கழகம்' என்ற பெயரில் தேசிய பல்கலைக்கழகமாக அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இன்று நடைபெற்றது.

இதன்படி, இந்நாட்டின் 17ஆவது அரச பல்கலைக்கழகமாக 'வவுனியா பல்கலைக்கழகம்' வரலாற்றில் இடம்பிடித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைந்த பிரயோக விஞ்ஞான பீடம், வர்த்தக பீடம் மற்றும் ஆங்கில மொழிப் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கிய வவுனியா வளாகம், 1997ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது.

இந்த வவுனியா வளாகத்தை தேசிய பல்கலைக்கழகமாக மாற்றுமாறு, மாணவர்கள் மற்றும் பேராசியர் குழாமினால் நீண்ட காலமாகக் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது. இதனைக் கருத்தில்கொண்ட தற்போதைய அரசு, 'சுபீட்சத்தின் நோக்கு'

☞ 2

# கொலைக்குற்றவாளியே இலங்கையின் ஜனாதிபதி

## வவுனியாவில் கோட்டாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம்





(வவுனியா நிருபர்)

வவுனியா பல்கலைக்கழகத்தை திறந்து வைப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று விஜயம் செய்த நிலையில் அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

☞ 2

## மக்கள் குறைகேள் சந்திப்பில் ஜனாதிபதி



(வவுனியா நிருபர்)

வவுனியாவுக்கு இன்று விஜயம் செய்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மக்கள் குறைகேள் சந்திப்பையும் மேற்கொண்டார்.

இன்று காலை 10 மணிக்கு வவுனியா பல்கலைக் கழகத்தின் விடுதியில் அமைந்துள்ள மைதானத்தில் விசேட ஹெலியில் வந்திறங்கிய ஜனாதிபதியை அமைச்சர்

☞ 2

## யாழ். மாவட்ட எம்.பிக்கள் ஆசனம் 7 ஆக அதிகரிப்பு

புதுப்பிக்கப்பட்ட தேர்தல் பதிவேட்டின் கீழ், யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு ஒரு நாடாளுமன்ற ஆசனம் அதிகரிக்கப் பட்டுள்ளது என வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதேநேரம் கம்பஹா மாவட்டத்தில் இருந்து ஒரு நாடாளுமன்ற ஆசனம் குறைக்கப்பட்டுள்ளது. தேர்தல் வாக்காளர்களின் எண்ணிக்கை அடிப்படையில் இந்த ஆசனங்கள் பகிர்ந்தளிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கமைய யாழ். மாவட்டத்துக்கான நாடாளுமன்றஆசனம்7ஆகஅதிகரிக்கப்பட்டுள்ளது.

## கல்விக் கட்டமைப்பின் பலம்தான் நாட்டின் பலத்தைத் தீர்மானிக்கும்

(வவுனியா நிருபர்)

நாடொன்று பலமடைய வேண்டுமாயின், அந்த நாட்டின் கல்விக் கட்டமைப்பு பலமடைந்திருக்க வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டிருந்த வவுனியா வளாகம், 'வவுனியா பல்கலைக்கழகம்' என்ற பெயரில் தேசிய பல்கலைக்கழகமாக அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு, ஜனாதிபதி தலைமையில் இன்று நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

☞ 2

## ஜனநாயகத்தின் காவலனே மங்கள!

### அனுதாபப் பிரேரணையில் சஜித் புகழாரம்



ஜனநாயகத்துக்காகப் போராடிய – களமாடிய பண்பு மிக்க அரசியல்வாதியே அமரர் மங்கள சமரவீர.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் அமரர் மங்கள சமரவீரவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதம் இன்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. அவ்விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு புகழாரம் சூட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

☞ 2



## கல்விக் கட்டமைப்பின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்மேலும்தெரிவித்தவைவருமாறு:-

தாம் பெற்றுக்கொள்ளும் அறிவைத் தமது பிரதேசங்களுக்கே வழங்க முடியுமானால், அதுவே தான் பிறந்த இடத்துக்கும் நாட்டுக்கும் செய்யும் பெரும் சேவையாகும். எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய சமூக மாற்றங்களை எதிர்கொள்ளக்கூடிய புத்திஜீவிகளைக் கல்வியினூடாகச்சமூகமயப்படுத்துவதே தற்போதைய அரசின் நோக்கமாகும்.

நாடொன்று பலமடைய வேண்டுமாயின், அந்த நாட்டின் கல்விக் கட்டமைப்பு பலமடைந்திருக்க வேண்டும். அதுவே, பயனுள்ள முதலீடாகும். தேசிய கல்வியைக் கட்டியெழுப்புவதற்கே தற்போதைய அரசு முன்னுரிமையளித்துள்ளது.

பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக விடுதிகள் உள்ளிட்ட அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்து, பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையைப் படிப்படையாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கலைப்பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் ஆங்கில மொழி மற்றும் தகவல் தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொடுக்கும் வகையிலான பாடத்திட்டங்களைச் சமூகத் தேவைகளுக்கேற்ப தயாரிப்பதற்காகப் பல்கலைக்கழகக் கட்டமைப்பு முன்னெடுத்த வேலைத்திட்டங்களுக்கும் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உலகில் அதிக கேள்வி நிலவும் துறைகளை அடையாளம் கண்டு, அத்துறைகளினூடான புத்திஜீவிகளை உருவாக்குவது காலத்தின் தேவையாகும்.

உயர்தரப் பரீட்சையில் சித்தியடையும் அனைத்து மாணவர்களும் பட்டப் படிப்பை மேற்கொள்வதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பது அரசின் பொறுப்பாகும்.

உங்களதும், உங்கள்நண்பர்களதும் மனங்களில் தேசிய சகவாழ்வைக் கட்டியெழுப்புவதற்கு, இவ்வாறான பல்கலைக்கழகங்களின் விடுதிகளையும் வகுப்பறைகளையும், மைதானங்களையும், சிற்றுண்டிச்சாலைகளையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பல்கலைக்கழகங்களில் ஏற்படுத்திக் கொள்ளும் பந்தங்கள் மிகவும் பெறுமதி வாய்ந்தவை. அந்தத் தொடர்பு, இந்த நாட்டினது அபிவிருத்திக்குப் பெரும் ஊன்றுகோலாக இருக்கும் என்று நம்புகின்றேன் - என்றார்.

## மக்கள் குறைகேள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், கு. திலீபன் மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முக்கியஸ்தர் ஜனக நந்தகுமார ஆகியோர் வரவேற்றனர்.

இதையடுத்து மைதானப் பகுதிக்கு வருகை தந்திருந்த மக்களிடம் காணிப் பிரச்சினை, விவசாயப் பிரச்சனை மற்றும் அவர்களது தேவைகள், கோரிக்கைகள் தொடர்பாகவும் ஜனாதிபதி கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது மக்களது பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளுடனும் ஜனாதிபதி கலந்துரையாடினார்.

## ஜனநாயகத்தின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்னை ஜனாதிபதி வேட்பாளராக்குவதற்கு முன்னின்று செயற்பட்டவர்தான் மங்கள சமரவீர. எனக்கு ஆதரவு தெரிவித்து ஹரின் பெர்னாண்டோ பதுளையில் முதலாவது கூட்டத்தை நடத்தினார். மாத்தறையில் மங்கள இரண்டாவது கூட்டத்தை நடத்தினார்.

மங்கள, எப்போதும் சரியான பக்கத்திலேயே நிற்பார். ஜனநாயகத்துக்காகத் துணிந்து போராடுவார். ஜனநாயகத்தை வெற்றிபெற வைக்கத் தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்டார். சர்வதேசத்தின் ஆதரவை வென்றவர். - என்றார்.

## கொலைக்குற்றவாளியே ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா, பம்பைமடுவில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்துக்கு ஜனாதிபதி சென்றிருந்த நிலையில் கறுப்புக் கொடிகளுடன் வருகைதந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பல்கலைக்கழகம் முன்பாக சென்று போராட்டத்தில் ஈடுபட முனைந்தனர்.

இதன்போது பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டதுடன், விசேட அதிரடிப்படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு பம்பைமடு சோதனைச் சாவடிப் பகுதியில் வைத்து பல்கலைக்கழகப் பகுதிக்கு செல்ல முடியாதவாறு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பொலிஸ் தடுப்பை உடைத்து செல்ல முற்பட்டமையால் அப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

இதன்போது, காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதி வேண்டும், போர்க்குற்றவாளியை சர்வதேச நீதிமன்றில் நிறுத்து, சர்வதேச விசாரணையே தேவை' என அவர்கள் கோஷம் எழுப்பியதுடன், பொலிஸாருடன் கடும் தர்க்கத்திலும் ஈடுபட்டனர்.

எமது உறவுகள் காணாமல்போகவில்லை. காணாமல் ஆக்கப்பட்டார்கள். நாங்கள் இந்த நாட்டின் பிரஜைகள் இல்லையா? நடமாடுவதற்கான சுதந்திரம் எமக்கில்லையா? எங்களை மட்டும் எப்போதுமே எதற்காகத் தடுக்கின்றீர்கள்? நாங்கள் பயங்கரவாதிகளா? எமக்கு எப்போதுமே கம்பிவேலி பிரயோகம்தானா? என்று பொலிஸாரைப் பார்த்து அவர்கள் கேள்வி எழுப்பினர்.

கொலைக்குற்றவாளியே நாட்டின் ஜனாதிபதியாக இருக்கிறார். அவர்களை நம்பியே நாம் எமது பிள்ளைகளை ஒப்படைத்தோம். எனவே, ஜனாதிபதியிடம் நாம் சில கேள்விகளைக் கேட்கவேண்டும். அதற்கு அனுமதி வழங்குங்கள் என்று போராட்டக்காரர்கள் தெரிவித்த போதும் அதனைப் பொருட்படுத்தாத பொலிஸார் அவர்களை முன்செல்ல அனுமதிக்கவில்லை. இதனால் குறித்த பகுதியில் பதற்றமான சூழல் ஏற்பட்டிருந்தது.

இதையடுத்து ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவின் அதிகாரி ஒருவர் வருகை தந்து, குறித்த போராட்டக்காரர்களுடன்கலந்துரையாடியமையுடன், இருவரை மாத்திரம் வந்து ஜனாதிபதியைச் சந்திக்குமாறு கோரினார். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த அவர்கள், நாம் அவரைச் சந்திக்க வரவில்லை. எங்கள் அனைவரையும் முன்செல்ல அனுமதிக்குமாறு கோரியமையுடன், கொலைக்குற்றவாளி எப்படிநீதிபதியாக மாற முடியும் என்றனர்.

இருமணி நேரத்துக்கும் மேலாக அந்தப் பகுதியில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் அவர்களை வழிமறித்து முன்செல்ல முடியாதவாறாக நின்றனர். இந்நிலையில், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கதறி அழுது கோஷமிட்டனர். அதில் ஒருவர் மயங்கி விழுந்ததையடுத்து அவர்கள் அங்கிருந்து வெளியேறிச் சென்றிருந்தனர்.

## வவுனியா பல்கலைக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கைப் பிரகடனத்தின் பிரகாரம் உயர்கல்வியை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ், விரிவுரை மண்டபங்கள், பீடங்களுக்கான கட்டடங்கள், விளையாட்டு மைதானம் உள்ளிட்ட நவீன வசதிகளுடன் கூடிய பல்கலைக்கழகமாக 'வவுனியா பல்கலைக்கழகம்' அபிவிருத்தி செய்யப்பட்டது.

வவுனியா பல்கலைக்கழக விடுதி மைதானத்தில் கூடியிருந்த பிரதேசவாசிகள், நிகழ்வு இடம்பெற்ற இடத்துக்கு வருகை தந்த ஜனாதிபதியை வரவேற்றனர். அவர்களுடன் சுமுகமாகக் கலந்துரையாடிய ஜனாதிபதி, அம்மக்களின் நலனை விசாரித்தறிந்தார்.

வவுனியா வளாகத்தை தேசிய பல்கலைக்கழகமாக மாற்றும் நிகழ்வைப் பதிவு செய்யும் நோக்கில் கல்வெட்டைத் திரைநீக்கம் செய்து திறந்துவைத்த ஜனாதிபதி, பல்கலைக்கழகத் தகவல் தொழில்நுட்ப மத்திய நிலையம் மற்றும் சகவாழ்வு மையம் போன்றவற்றை மாணவர் பாவனைக்குக் கையளித்தார்.

அமைச்சர்களான தினேஷ் குணவர்தன, டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், குலசிங்கம் திலீபன், புத்தசாசன அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரும் சிரேஷ்ட பேராசிரியருமான சம்பத் அமரதுங்க ஆகியோரும், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## தேர்தலை ஒத்தி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மஹிந்த ராஜபக்ஷ என்பவர் தேர்தலுக்கு அஞ்சும் தலைவர் கிடையாது. முன்கூட்டியே தேர்தலை நடத்தித்தான் பழக்கம். எனவே, தேர்தலைப் பிற்போடும் எண்ணம் அரசுக்கு இல்லை.

கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே தேர்தல் நடத்தப்படும். அது எந்தத் தேர்தலாக இருந்தாலும் நாம் வெற்றிகரமாக எதிர்கொள்வோம்.

தேர்தல் என்பது மக்களின் ஜனநாயக உரிமை. அதனை அவர்களுக்கு வழங்க வேண்டும் - என்றார்.

## நிழல் உலக தாதா 'அபா' துப்பாக்கிச்சூட்டில் பலி!

பாதாளக்குழு உறுப்பினரான அபா என்றழைக்கப்படும் துலான் சமீர சம்பத், விசேட அதிரடி படையின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் பலியாகியுள்ளார்.

மொறட்டுவ எகொடவுயன பகுதியில் வைத்தே நேற்றிரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த நிழல் உலக தாதாவை கைது செய்வதற்காகப் படையினர் சென்ற வேளை, சந்தேகநபர், விசேட அதிரடிப் படையினரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.

இதில் விசேட அதிரடிபடை அதிகாரி ஒருவர் காயமடைந்து பாணந்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சுற்றிவளைப்பில் மேலும் 6 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்:-
076 443 8622

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**வாடகைக்கு**

**என்னை ஞாபகமிருக்கிறதா?**



✓ 3 மாடி
✓ சுமார் 12 ஆயிரம் சதுர அடி
✓ வாகனத்தரிப்பிடம்
போன்ற நவீன வசதிகளுடன்

கிளிநொச்சி நகரில் அன்று முதல் இன்றுவரை கம்பீரமாகக் காட்சி அளிக்கின்றேன்.

தொடர்புகளுக்கு:-
076 307 8091, 074 077 1013

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# விளக்குமாற்றுக்குப் பட்டுக் குஞ்சம்

தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகத்திற்காக (Office for National Unity and Reconcilliation - ONUR) விசேட சட்ட மூலம் ஒன்று கொண்டு வந்து நிறைவேற்றப்படும் என நீதி அமைச்சர் அலி சப்ரிக்கு கீழான அந்த அமைச்சு அறிவித்திருக்கின்றது.

ஓர் அமைச்சரவைப் பத்திரம் மூலமே இந்த அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டது. இப்போது இயங்குகின்றது. அதற்கு சட்ட அங்கீகாரமும் அந்தஸ்தும் கொடுப்பதற்காக அது தொடர்பில் ஒரு சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அது அங்கீகரிக்கப்படும் என்று நீதி அமைச்சு தெரிவிக்கின்றது.

அந்த அலுவலகம் செயற்படும் சீத்தவத்தில் அதற்கு இதெல்லாம் தேவைதானா என்ற கேள்வி எழுகின்றது.

துடைப்பக்கட்டைக்குப் பட்டுக் குஞ்சம் எதற்கு?

முன்னைய நல்லாட்சி அரசு ஏற்பட்ட போது தேசிய ஐக்கியம், நல்லிணக்கம் பற்றி எல்லாம் அதிக சிரத்தை காட்டப்பட்டது என்பது உண்மைதான்.

தேசிய ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்தி நிலை நாட்டும் வகையில் இந்தத் தீவின் மூன்று இன மற்றும் நான்கு மத மக்களுக்கும் இணக்கமான – அவர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்கின்ற – ஓர் அரசமைப்பை உருவாக்குவது வரை பல விடயங்கள் குறித்து தேசிய மட்டத்தில் சிந்திக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அதன் ஒரு கட்டமாகவே மேற்படி தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம் 2015 ஏப்ரலில் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசினால் ஓர் அமைச்சரவைப் பத்திரம் மூலம் ஸ்தாபிக்கப்பட்டது. அப்போதைய அரசின் கீழ் அது இயங்கியது. தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் கீழ் அப்போது அது கொண்டு வரப்பட்டமையினால் நல்லிணக்க முயற்சிகளில் அது காத்திரமான பங்களிப்பை வழங்கியது எனலாம்.

ஆனால் மீண்டும் பௌத்த, சிங்களப் பேரினவாத வெறிக் கூச்சலோடு அதிகாரத்தைக் கைப்பற்றிய ராஜபக்ஷ ஆட்சி அதிகாரத்தின் கீழ் தேசிய ஐக்கிய மற்றும் நல்லிணக்க முயற்சிகள் சிதைந்து சின்னாபின்னமாக இந்த அலுவலகமும் வெறும் இறப்பர் முத்திரைக் கட்டமைப்பாகியது.

சிறுபான்மையினரின் தனித்துவச் சிறப்புக்களை இல்லாதொழிக்கும் பேரினவாத ஆக்கிரமிப்பும் கபளீகரமுமே இந்த அரசின் பொதுவான கொள்கைக் கோட்பாடாகக் கட்டவிழும் போது, தேசிய ஐக்கியமும் நல்லிணக்கமும் காணாமலேயே போய்விட்டன.

சிறுபான்மையின மக்களின் தனித்துவங்கள், வாழிடங்கள், மொழி – பண்பாட்டு உரிமைகள், சிறப்புகளைப் பேரினவாதம் வல்வந்தமாக ஆக்கிரமித்து, கபளீகரம் பண்ணி, சூறையாடித் தனக்குள் அடக்கிக் கொள்வதே தேசிய ஐக்கியத்துக்கான ஒரே மார்க்கம் என்று பேரினவாத வெறி கொண்டலையும் இந்த அரசின் கீழ் – அரசுத் தலைவரின் கீழ் – இத்தகைய தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம் என்பது வெறும் கண்துடைப்பு வேலை; பம்மாத்து நாடகம்.

'ஒரே நாடு ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணி, கிழக்கு மாகாணத் தொல்பொருள் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கான ஜனாதிபதி செயலணி போன்றவை இத்தகைய பேரினவாத ஆக்கிரமிப்புப் பூதத்தின் வலுவான கைகளில் சில.

அவற்றுக்கு மத்தியில் தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம், காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம், இழப்பீடு வழங்கலுக்கான அலுவலகம் போன்றவை எல்லாம் வெறும் ஏட்டுச் சுரைக்காய்கள்தாம்.

இப்போது அவை தமது நீதி அமைச்சின் கீழ் பெயருக்கு இணைக்கப்பட்டிருப்பதால் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவரான நீதியமைச்சர் அலி சப்ரி அவற்றை வைத்துக் கொண்டு சட்ட ரீதியான அங்கீகாரம், அது, இது என்று சில ஆரவாரங்கள் பண்ணுகின்றார். அவ்வளவுதான். அதனால் தேசிய ஐக்கியமும் ஏற்பட்டு விடப்போவதில்லை. நல்லிணக்கம் உருவாகி விடப் போவதில்லை என்பது திண்ணம்.

விளக்கு மாற்றுக்குப் பட்டுக்குஞ்சம் எதற்கு?

# வடக்கு மாகாண மீனவர் சமூகத்தின் அழிவுக்கு இலங்கைக் கடற்படையும் அரசுமே பொறுப்பு!

## கஜேந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு



சொந்த நாட்டு மீனவர்களின் பாதுகாப்பு குறித்து உத்தரவாதப்படுத்தவேண்டிய இலங்கை அரசு எந்த உத்தரவாதமோ வாக்குறுதியோ வழங்காதிருக்க, வடக்கு மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து இந்தியா நேரடியாக எமக்கு உறுதிமொழி வழங்குகின்றது. எனவே, எமது மீனவர்களின் அழிவுக்கு இலங்கை கடற்படையும் இலங்கை அரசுமே பொறுப்புக் கூற வேண்டும்.

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட எம்.பியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை, இடம்பெற்ற குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்த கஜேந்திரகுமார் எம்.பி. மேலும் கூறுகையில்,

வடக்கு மாகாண மீனவர்கள் தமது நாளாந்த வாழ்வாதாரத்தை இழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. எமது கடற்பரப்பிற்கு அப்பால் உள்ள மக்கள் எமது எல்லைக்குள் வருவதுடன் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். அதுமட்டுமல்லாது எமது வடக்கு மாகாண மீனவர்களின் மீன்பிடி வளங்களையும் சேதப்படுத்தும் நிலைமை காணப்படுகின்றது. வடக்கு மாகாணத்தை பொறுத்தவரை 50 ஆயிரம் குடும்பங்கள் மீன்பிடித் துறையுடன் நேரடியான தொடர்பில் உள்ளனர். இருநூறு ஆயிரம் தனி நபர்கள் நேரடியாக மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். யாழ்ப்பாணத்தை பொறுத்தவரை 23 ஆயிரம் மீனவ குடும்பங்களை சேர்ந்த ஒரு லட்சத்திற்கும் அதிகமான தனி நபர்கள் நேரடியாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

எனினும், வடக்கு மாகாணத்தை சாராத இலங்கை மீனவர்கள் இலங்கை கடற்படை மற்றும் பாதுகாப்புப்படைகளின் அனுமதியுடன் வருபிக்றமையுடன், சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுவதால் எமது உள்ளூர் மீனவர்கள் அதிக துன்பங்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது. அதேபோல் தமிழ்நாடு மீனவர்கள் சட்ட விரோதமாக எமது எல்லைக்குள் வருகை தந்து மீன்பிடியில் ஈடுபடுவது குறித்தும் தொடர்ச்சியாக நாம். மீன்பிடித்துறை அமைச்சின் குழுக்களிலும், பல சந்தர்ப்பங்களில் நாடாளுமன்றத்திலும் முறையிட்டுள்ளோம்.

வடக்கிற்கு வெளியில் உள்ள மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி செயற்பாடுகள் காரணமாக சேதமாக்கப்பட்டுள்ள எமது மீனவர்களின் சொத்துக்கள் 60 கோடி ரூபாவிற்கும் அதிகமாகும். யாழ்ப்பாணத்தை எடுத்துக் கொண்டால் 250 மில்லியன் ரூபா அளவிலான சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. ஆனால் இதனை அரசு கண்மூடித்தனமாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றது.

தமிழர்களின் காணிகளை அபகரித்து ஓர் ஆக்கிரமிப்பு படையாக இங்கே இருக்கின்ற இலங்கை கடற்படை, தமிழ் மீனவர்கள் மீதான இந்த அத்துமீறல்களை அனுமதிப்பதன் மூலம் வடக்கு கிழக்கு மீனவ சமூகத்தை மேலும் மேலும் வறுமைபடுத்தி அவர்களை இந்த பகுதியில் இருந்து தாமாகவே வெளியேறப்பண்ணும் ஓர் இனப்படுகொலை நிகழ்ச்சிநிரலாகவே நான் இதை பார்க்கிறேன்.– அரசின் இந்த பாராமுகம் திட்டமிட்ட ஓர் இனப்படுகொலை நிகழ்ச்சி நிரலின் ஓர் அங்கமே .

வடக்கு மக்களின் வாக்குகளால் தான் தெரிவு செய்யப்பட்டுள்ளேன் எனக் கூறிக் கொள்ளும் கடற்றொழில் அமைச்சர் மிக கேவலமாக முதுகெலும்பு அற்றவராக, கையாலாகதவராக அரசதரப்பில் இருந்து கொண்டு தனக்கு வாக்கு போட்ட மக்களுக் கெதிராகவே செயற்படுகிறார்.

ஆகவே தான் பிரச்சினைகளின் அடிப்படைகள் குறித்து பேசவேண்டும், அதிகாரங்கள் எம்மிடம் வரவேண்டிய தேவை குறித்து பேசவேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம், மாறாக வெறுமனே ஒற்றையாட்சி என்றும், 13 ஆவது திருத்தம் என்றும் கதைத்துக்கொண்டிருப்பது பிரச்சினையின் அடிப்படையை மாற்றும் செயலே.

இந்திய மீனவர்களின் அத்துமீறல் குறித்து நாம் கொண்டுவரவிருந்த ஒத்திவைப்பு பிரேரணையை ஒத்திவைக்குமாறும் தாம் இந்த விடயம் குறித்து உடனடியாக காத்திரமான நடவடிக்கை எடுப்பதாகவும் இந்தியத் தூதரகம் எமக்கு அறியத்தந்திருக்கின்றது.

அதேவேளை, இந்தவிடயத்தில் உண்மையில் சொந்த நாட்டு மக்களின் பாதுகாப்பு தொடர்பாக உத்தரவாதப்படுத்த வேண்டிய இலங்கை அரசு ஒன்றுமே செய்யாதிருக்க , வெளிநாடு ஒன்று இந்த விடயத்தில் உத்தரவாதம் தரவேண்டியிருக்கிற நிலைமை இங்கு நிலவுகின்றது – என்றார்.

# இராணுவத்தால் கிளிநொச்சியில் உலருணவுப் பொதிகள் வழங்கல்



மனிதாபிமானமுள்ள இராணுவத்தினால் கண்ணன் தேவாலய வளாகத்தில் கடந்த சனிக்கிழமை கிளிநொச்சியைச் சேர்ந்த 42 வறிய குடும்பங்களுக்கு பிரதேசத்திலுள்ள நன்கொடையாளர்களின் உதவியுடன் உலர் உணவுப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்தத் திட்டம் முல்லைத்தீவு பாதுகாப்பு படைத் தலைமையக தளபதி சஞ்சய வணசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய 57 ஆவது படைப்பிரிவு தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த ஜயவர்தனவின் வழிகாட்டலின் கீழ் 571, 572 மற்றும் 573 ஆவது பிரிகேடின் சிப்பாய்களால் முன்னெடுக்கப்பட்டது.

காரைநகர் மற்றும் இளமந்தலாறு மற்றும் பணிக்குளம் கிராம உத்தியோகத்தர்களின் ஆலோசனையுடன் முன்னெடுக்கப்பட்ட இந்த நிகழ்வில் குழந்தை களுடன் வாழும் வறிய குடும் பங்களுக்கான நிவாரணப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

பகிர்ந்தளிக்கப்பட்ட உலர் நிவாரணப் பொதிகளில் அரிசி, பருப்பு, நெத்தலி, பால்மா, காரப் பொருள்கள், மசாலப் பொருள்கள், ஊட்டச்சத்துள்ள உணவுகள், பொதி செய்யப்பட்ட உணவுகள் போன்றவற்றை உள்ளடக்கிய தாகவும் ஒவ்வொரு பொதியும் 2 ஆயிரத்து 750 ரூபா பெறுமதியானதாகவும் காணப்பட்டன.

இராணுவத்தின் சமூக பணிகளைப் பாராட்டும் விதமாக நன்கொடையாளர்கள் இந்தத் திட்டத்துக்கு நன்கொடைகளை வழங்க முன்வந்திருந்தனர்.

இந்த நிகழ்வில் 57 ஆவது படைப்பிரிவு தளபதியின் சார்பில் 9 ஆவது இலங்கை சிங்கப் படையணியின் மேஜர் சீ.எம்.ஜீ. என்.எஸ். சமரசேகர பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தமையோடு, ஏனைய அதிகாரிகள் சிலரும் சிப்பாய்களும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

வெள்ளிக்கிழமை
11.02.2022



# பெலாரஸுடன் கூட்டு இராணுவப் பயிற்சியை பதற்றத்துக்கு மத்தியில் ரஷ்யா தொடக்கம்

உக்ரைனின் எல்லைகளில் ரஷ்யப் படைகள் குவிக்கப்படுவதைப் பற்றிய கவலைகள் அதிகரித்துள்ள நிலையில், ரஷ்யாவும் பெலாரஸும் 10 நாள்கள் கூட்டு இராணுவப் பயிற்சியைத் தொடங்க உள்ளன.

பனிப்போருக்குப் பிறகு முன்னாள் சோவியத் பெலாரஸுக்கு ரஷ்யாவின் மிகப்பெரிய இராணுவ நடவடிக்கைக்கான இடம் அல்லது நிலைக்கு துருப்புக்கள் அல்லது உபகரணங்களின் நகர்வைஇந்தக் கூட்டுப் பயிற்சிகள் குறிக்கின்றன என்று நேட்டோ கூறுகிறது.

உக்ரைன் மீதான பதற்றத்திற்கு மத்தியில் முன்னெடுக்கப்படும் இந்தப் பயிற்சி பதற்றத்தை மேலும் அதிகரிக்கும் நடவடிக்கை என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

ஐரோப்பா முழுவதும் மோதலைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்ட இராஜதந்திர பேச்சுவார்த்தைகள் எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில், இந்த செய்தி வெளிவந்துள்ளது.

பெலாரஸுடனான பயிற்சியில் சுமார் 30ஆயிரம் ரஷ்ய துருப்புக்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர், ரஷ்யாவும் பெலாரஸும் முன்னோடியில்லாத அச்சுறுத்தல்களை எதிர்கொள்கிறது எனக் கூறி, கூட்டுப் பயிற்சிகள் முக்கியமானவை என விபரித்தார்.

எவ்வாறாயினும், ரஷ்யாவின் ஐரோப்பிய ஒன்றிய தூதர் விளாடிமிர் சிசோவ், 'உக்ரைன் மீதான நெருக்கடியைத் தணிக்க இராஜதந்திரம் உதவும் என்று தனது நாடு இன்னும் நம்புவதாகக் கூறினார். பெலாரஸில் தற்போது நிலைகொண்டுள்ள ரஷ்ய துருப்புக்கள் பயிற்சிக்குப் பிறகு நிரந்தர தளங்களுக்குத் திரும்புவார்கள் என்று அவர் மேலும் கூறினார்.

'இந்த இராணுவப் பயிற்சிகளுக்கான தயாரிப்பைப் பார்க்கும்போது, இது நிச்சயமாக ஒரு தீவிரமான நடவடிக்கையாகவே நாங்கள் பார்க்கிறோம்' என வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் ஜென் சாகி கூறினார்.

எல்லையில் ஒரு இலட்சம் துருப்புக்களைக் குவித்துள்ள போதிலும், உக்ரைன் மீது படையெடுப்பதற்கான எந்தவொரு திட்டத்தையும் ரஷ்யா மீண்டும் மீண்டும் மறுத்துள்ளது.

ஆனால், ரஷ்யாவின் தாக்குதல் எந்த நேரத்திலும் வரலாம் என அமெரிக்கா உள்ளிட்ட சில மேற்கத்திய நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

# ஒமிக்ரோன் பரவலால் 5 லட்சம் உயிரிழப்புகள் உலக சுகாதார நிறுவனம் கவலை தெரிவிப்பு

ஒமிக்ரோன் பரவலுக்குப் பின் உலகம் முழுவதும் அரை மில்லியன் அதாவது 5 லட்சம் உயிர்ப்பலி பதிவாகியுள்ளது. நிலைமை இப்படியிருக்க ஒமிக்ரோன் மிதமானது என்று எப்படிக் கூற முடியும் என கவலை தெரிவித்துள்ளது உலக சுகாதார நிறுவனம்.

அந்த அமைப்பின், பெருந்தொற்று இறப்புகள் தொடர்பான மேலாளர் அப்டி முகமது கூறுகையில், கடந்த நவம்பர் இறுதியில் பரவத் தொடங்கிய ஒமைக்ரான் தொற்றால் இதுவரை உலகம் முழுவதும் 5 லட்சம் பேர் உயிரிழந்துள்ளனர். 1.3 கோடி மக்களுக்கு தொற்று ஏற்பட்டுள்ளது.




இது வெகுநிச்சயமாக டெல்ராவை விட அதிக பரவல். ஒமிக்ரோனால் தீவிர நோய் பாதிப்பு இல்லை என்ற கருத்து நிலவும் சூழலில் இந்தப்புள்ளிவிவரத்தையும்கவனிக்கவேண்டும். இத்தனை தடுப்பூசிகள் இருந்தும் குறுகிய காலத்தில் 5 லட்சம் பேர் இறந்துள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது. இதை நிறையப்பேர் கவனிக்கத் தவறியுள்ளனர் - என்றார்.

உலக சுகாதார அமைப்பின் தொழில்நுட்பப் பிரிவு தலைவர் மரியா வான் கெர்கோவ் கூறுகையில், நமக்குக் கிடைத்துள்ள ஒமிக்ரோன் தொடர்பான எண்ணிக்கைகள் வியக்கவைக்கின்றன. ஆனால் அதே வேளையில் உண்மையான எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கும். இதற்கு முந்தைய அலைகளை எல்லாம் எண்ணிக்கை அளவில் ஒமிக்ரோன் அலை தட்டையாக்கிவிட்டது.

நாம் இன்னும் பெருந்தொற்றுக்கு இடையில் தான் இருக்கிறோம். நாம் அது முடியும் தருணத்தை நெருங்கவுள்ளோம். இன்னும் நிறைய நாடுகளில் இப்போது ஒமிக்ரோன் உச்ச அலையில் இருக்கிறது. கொரோனா உயிரிழப்புகள் கடந்த சில வாரங்களாகவே தொடர்ந்து அதிகமாக இருக்கின்றமை வருத்தமளிக்கிறது.

ஒமிக்ரோனின் B.2 உருமாற்றம் தான் அதிக உயிரிழப்புகளை ஏற்படுத்தியுள்ளது என்றார். அதேபோல் ஒரே நபருக்கு ஒரே வேளையில் B.1, B.2 ஆகிய திரிவுகளால் பாதிப்பு ஏற்படுகிறதா என்ற ஆய்வுகள் நடக்கின்றன எனக் கூறப்பட்டுள்ளது.

கடந்த 2019 டிசெம்பரில் சீனாவில் முதன் முதலாக கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டதில் இருந்து இதுவரை 5 கோடியே 75 பேர் உலகம் முழுவதும் உயிரிழந்தனர்.



# சீனா தமது எல்லைக்குள் அத்துமீறி நுழைகின்றது என நேபாளம் குற்றச்சாட்டு!

சீனா தங்கள் எல்லைக்குள் ஊடுருவலில் ஈடுபட்டுள்ளது என நேபாள அரசாங்கம் முதல்முறையாக அதிகார பூர்வமாகக் கூறியுள்ளது.

ஆனால், நேபாளத்தில் உள்ள சீனத் தூதரகம் இந்த ஊடுருவல் குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ளது.

மேற்கு நேபாளத்தின் ஹும்லா மாவட்டத்தில் சீனா அத்துமீறுகின்றது எனக் கூறப்பட்டதை அடுத்து, கடந்த ஆண்டு செப்ரெம்பரில் இந்த அறிக்கை தயாரிக்க அரசாங்கத்தால் அறிவுறுத்தப்பட்டது.

இந்தநிலையில், இதுதொடர்பான விரிவான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள சர்வதேச ஊடகம், இதுகுறித்து முழுமையான தகவல்களை வெளியிட நேபாள அரசாங்கம் தயங்குவதாகக் குறிப்பிட்டுள்ளது.

இந்த அறிக்கை ஏன் இன்னும் வெளியிடப்படவில்லை என்பது தெளிவாகத் தெரியவில்லை. சமீபத்திய சில ஆண்டுகளில் நேபாள அரசாங்கம், சீனாவுடனான தன் உறவை மேம்படுத்திக்கொள்ள முயற்சித்து வந்தது.

இந்தநிலையில், இந்த அறிக்கையின் முடிவுகள் சீனாவுடனான உறவுகளை மேம்படுத்தும் நேபாள அரசாங்கத்தின் முயற்சியில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். இரு நாடுகளுக்கும் இடையே பொதுவான எல்லை இருக்கும் நிலையில், இந்தப் பகுதியில் படையினரை நிறுத்த வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹும்லா மாவட்டத்தில் சீனாவின் அத்துமீறல் குறித்த தகவலைத் தொடர்ந்து, நேபாள அரசாங்கம் ஒரு பணிக்குழுவை அனுப்ப முடிவு செய்தது. இந்தக்குழுவில் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் அரசின் பிரதிநிதிகள் இருந்தனர்.

நேபாள எல்லைப் பகுதியில் உள்ள லாலுங்ஜோங் பகுதி கைலாய மலைக்கு அருகில் இருப்பதால் பாரம்பரியமாக யாத்திரிகர்களை ஈர்க்கும் மையமாக இருந்து வருகிறது. குறிப்பாக இது இந்துக்கள் மற்றும் பௌத்தர்களுக்கு புனிதமான இடம்.

ஆனால், இந்தப் பகுதியில் சமய நடவடிக்கைகளை கூட சீனப் பாதுகாப்புப் படையினர் தடுத்தனர் என நேபாள அரசின் பணிக்குழு அறிக்கை கூறியுள்ளது. மேலும், நேபாள விவசாயிகளின் கால்நடை மேய்ச்சலை சீனா கட்டுப்படுத்தி வருகின்றது எனவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சில பகுதிகளில் சீனா எல்லைத் தூண் அருகே வேலி அமைத்து, நேபாளப் பகுதியில் கால்வாயை ஒட்டி சாலை அமைக்க முயற்சிப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம், நேபாளப் பகுதியில் கட்டப்பட்டுள்ளது எனக் கூறப்படும் சீனக் கட்டடங்கள் உண்மையில் சீனாவின் பகுதிக்கு உள்ளேதான் கட்டப்பட்டிருக்கின்றன என்றும் பணிக்குழு கண்டறிந்தது.

1960ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில், இரு நாடுகளுக்கும் இடையே பல ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இரு நாடுகளின் எல்லைப்பகுதிகளுமே தொலைதூரப் பகுதிகளாக இருப்பதால் அங்கு செல்வது எளிதல்ல.

தரைப்பகுதியில் எல்லையானது தூண்கள் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்தகைய சூழ்நிலையில், சில நேரங்களில் நேபாளம் மற்றும் சீனாவின் எல்லைப்பகுதி வரையறைகளைப் புரிந்துகொள்வதே கடினம்தான். நேபாளத்துக்கும் சீனாவுக்கும் இடையிலான எல்லை இமயமலையை ஒட்டி சுமார் 1,400 கி.மீ உள்ளது.

# ரஷ்யப் படைகளின் நெருக்கடி அதிகரிக்காது; புடின் உறுதியளித்தார் என மக்ரோங் தெரிவிப்பு

யுக்ரேன் எல்லைக்கு அருகே ரஷ்யப் படைகள் தனது நெருக்கடியை அதிகரிக்காது என்று அந்நாட்டு அதிபர் விளாடிமிர் புடின் தனக்கு உறுதியளித்தார் எனப் பிரான்ஸ் அதிபர் எம்மானுவேல் மக்ரோங் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

யுக்ரேன் நாட்டு அதிபர் வொலோடிமிர் ஜெலன்ஸ்கியை சந்திப்பதற்கு முன், எந்த விதமான சீரழிவோ அல்லது விரிவாக்கமோ இருக்காது என்று எனக்கு உறுதியளிக்கப்பட்டது என்று அவர் கூறியுள்ளார்.

இருப்பினும், உத்தரவாதம் அளிக்கும் எந்தவொரு கூற்றும் சரியானதல்ல என்று ரஷ்யா கூறியுள்ளது.

பிரான்ஸ் நாட்டு அதிபர் மக்ரோங் இந்த வாரம் தேசிய தலைநகரங்களுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். கடந்த திங்கட்கிழமையன்று மாஸ்கோவில் ரஷ்ய அதிபர் புடினுடன் கிட்டத்தட்ட 6 மணி நேரம் நடந்த பேச்சுக்குப் பிறகு, கடந்த செவ்வாய்க் கிழமையன்று அவர் யுக்ரேன் தலைநகரமான கீவை வந்தடைந்தார்.

யுக்ரேன் எல்லையில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான ரஷ்யப் படைகள் குவிக்கப்பட்டுள்ளன. ரஷ்யா யுக்ரேன் மீது படையெடுக்க திட்டமிட்டுள்ளது என மேற்குலக நாடுகள் கூறுகின்றன. ஆனால் அதை ரஷ்யா மறுக்கிறது



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தியுள்ளோம் நாடாளுமன்றில் நிர்மலா சீதாராமன் தெரிவிப்பு



நாடாளுமன்றத்தில் உரையாற்றிய நிதிய மைச்சர் நிர்மலா சீதாராமன், தற்போது கொரோனா காலத்திலும் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தியுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் பட்ஜெட் மீதான விவாதம் நடைபெற்று வருகிறது. இன்று மாநிலங்களவையில் பதிலுரை அளித்து உரையாற்றிய நிர்மலா சீதாராமன், 2008/ 2009 ஆண்டில் விலைவாசி உயர்வு 9.1 சதவீதமாக இருந்தது. தற்போது கொரோனா காலத்திலும் விலைவாசி உயர்வை 6.2 ஆக கட்டுப்படுத்தியுள்ளோம் என்றார்.

மேலும், மத்திய பட்ஜெட்டில் நாட்டின் வளர்ச்சிக்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ''பட்ஜெட்டில் தொழில்நுட்பத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது'' என்றும் அவர் தெரிவித்தார்.




# மும்பையில் பாடசாலை பஸ் திடீரென தீப்பற்றி எரிந்தது

மும்பையில் உள்ள ஜுஹு பகுதியில் பாடசாலை பஸ் ஒன்று திடீரென தீப்பிடித்து எரிந்தது.

தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து தீயை அணைக்கப் போராடிய போதும் பஸ் முழுவதும் எரிந்து கருகியது. ஆயினும் இந்த விபத்தில் உயிர்ச்சேதம் ஏதுமின்றி தவிர்க்கப்பட்டுள்ளது எனத் தீயணைப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

பஸ் தீப்பிடித்தது எப்படி என்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



# அடுக்குமாடி குடியிருப்பு சரிந்துவீழ்ந்தது ஹரியானாவில் 2 பேர் உயிரிழந்தனர்

ஹரியானாவில் அடுக்குமாடி குடியிருப்பின் மேற்கூரை இடிந்து விழுந்ததில் 2 பேர் உயிரிழந்தனர். குருகிராமின் செக்டார் 109 இல் உள்ள வீட்டு வளாகத்தின் ஆறாவது தளத்தின் மேற் கூரையின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது. இதில் இடிபாடுகளில் சிக்கிய பெண் ஒருவர் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார். மேலும் சிக்கியுள்ள இருவரை மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன எனத் தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் நிலைமையை நேரில் கண்காணித்து வருகின்றேன் என ஹரியானா முதல்வர் மனோகர்லால் கட்டார் தெரிவித்துள்ளார்.



# இந்தியாவில் புதிதாக 58 ஆயிரம் பேருக்குக் கொரோனா உறுதி

இந்தியாவில் தினசரி கொரோனாப் பாதிப்பு நேற்றை விட சற்று குறைந்து 58 ஆயிரத்து 77 ஆகப் பதிவாகியுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 657 பேர் நோய்த்தொற்றுக்கு பலியாகியுள்ள நிலையில், ஒன்றரை லட்சம் பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

நாட்டின் தினசரி பாதிப்பு விகிதம் 3 புள்ளி 89 சதவீதமாக குறைந்திருக்கின்றது எனத் தெரிவித்துள்ள மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம், தற்போது நாடு முழுவதும் 6 லட்சத்து 97 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளது.

# மனநலம் பாதித்த மூதாட்டியை இழுத்துச் சென்று தாக்கிய மாணவன் பொலிஸாரால் கைதானார்

திருப்பதியில் மனநலம் பாதித்த மூதாட்டியை சாலையில் தர தரவென இழுத்துச் சென்று தாக்கிய கல்லூரி மாணவனின் வீடியோ வெளியான நிலையில் மாணவனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ரங்கா ரெட்டி மாவட்டம் ஷாத் நகரில் சாலையில் காயங்களுடன் இருந்த மூதாட்டியிடம் பொது மக்கள் விசாரித்த போது மாணவன் தாக்கியமை தெரிய வந்துள்ளது.

அப்பகுதியில் பொருத்தப்பட்டு இருந்த சி.சி.டி.வி. கமெராவை ஆய்வு செய்த மக்கள், மாணவன் மூதாட்டியைத் தாக்கும் வீடியோவை கொண்டு பொலிஸில் முறைப்பாடு செய்தனர். சம்பவம் தொடர்பாக அதேபகுதியை சேர்ந்த அந்தக் கல்லூரி மாணவன் பர்வேசை பொலிஸார் கைது செய்துள்ளனர். விசாரணையில் மூதாட்டி தகாத வார்த்தையில் தன்னைத் திட்டியமையால் அவரைத் தாக்கினேன் என மாணவன் தெரிவித்தார் எனப் பொலிஸார் குறிப் பிட்டனர்.





# மகளை பாலியல் பலாத்காரம் செய்த தந்தையும் அவரது நண்பரும் கைது

விழுப்புரம் பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய சிறுமி பெற்ற தந்தையால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டுள்ளார். இந்த கொடூர சம்பவம் தொடர்பாக பொலிஸ் தரப்பில் கூறப்பட்டவை வருமாறு :

விழுப்புரம் பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய சிறுமி, தாய் இறந்துவிட்டமையால் தந்தையின் பராமரிப்பில் வசித்து வருகிறார்.

இந்தச் சூழலில் அவர் தற்போது 8 மாத கர்ப்பிணியாக உள்ளார். இது தொடர்பாக சிறுமியின் உறவினர்கள் மற்றும் அயலவர்கள் விசாரித்தபோது சிறுமி கூறிய தகவலைக் கேட்டு அவர்கள் அதிர்ச் சியில் உறைந்தனர். அந்த சிறுமியை அவ ரது தந்தை கோவிந்தன் (வயது 44) மற்றும் அவரது நண்பரான வி.சாத்தனூரை சேர்ந்த கந்தகோணி என்கிற முனுசாமி (வயது-48) ஆகிய இருவரும் பலாத்காரம் செய்தனர் எனக் கூறப்படுகிறது. இந்த விடயம் தொடர்பாக சிறுமி, விழுப்புரம் அனைத்து மகளிர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். அதன்படி கோவிந்தன், கந்தகோணி என்கிற முனுசாமி ஆகிய இருவரின் மீதும் போக்சோ சட்டத்தின் கீழ் பொலிஸார் வழக்குப்பதிவு செய்யப்பட்டு இருவரையும் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். பெற்ற மகளையே பலாத்காரம் செய்த தந்தை உட்பட 2 பேர் போக்சோ சட்டத்தில் கைது செய்யப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# அரச காணியை தனியாருக்கு அடாத்தாக வழங்கியமை கல்முனையில் மக்கள் போராட்டத்தினால் முறியடிப்பு!

## தமிழ் மக்களுடன் விகாராதிபதியும் சேர்ந்து களத்தில்






கல்முனை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கல்முனை 1சி கிராம சேவகர் பிரிவு மயான வீதியில் அமைந்துள்ள அரச காணியை அடாத்தாக தனியார் அமைப்பினருக்கு வழங்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், நேற்று முன்தினம் இவ்விடயம் தொடர்பில் ஆட்சேபத்தை வெளியிட்ட மாநகரசபை உறுப்பினருக்கு அச்சுறுத்தல் விடுத்தமைக்கு கண்டனம் தெரிவித்தும் அப்பிரதேச பொதுமக்கள் – குறிப்பாகத் தமிழ் மக்கள் – பொது அமைப்புகளின் உதவியுடன் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நேற்றைய தினம் முன்னெடுத்தனர்.

கல்முனை மாநகரசபை உறுப்பினர் எஸ்.ராஜன் அவர்களின் ஏற்பாட்டில் பிரதேச மதகுருமாரின் ஒத்துழைப்புடன் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதில் பிரதேச பொது மக்கள், கிராம் மாதர் அபிவிருத்திச் சங்கத்தினர், முதியோர் அமைப்பினர், மீனவ சங்கத்தினர் எனப் பலதரப்பட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

குறிப்பிட்ட காணி அமைந்துள்ள இடத்தில் ஆரம்பிக்கப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் வரையில் பேரணியாக இடம்பெற்று பின்னர் பிரதேச செயலகம் முன்னால் ஆர்ப்பாட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

இது குறித்து பிரதேச செயலாளர் கருத்துக் கூறியவை வருமாறு –

குறிப்பிட்ட காணி கல்முனை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவின் ஆளுகைக்குட்பட்டதெனவும் இருப்பினும், மேற்படி காணி தனியார் அமைப்பொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில்தான் அறியவில்லையெனவும் இது குறித்து மாவட்ட செயலாளருடன் தொடர்பு கொண்டு பின்னர் அறிவித்தார் எனவும் குறிப்பிட்டார்.

இவ்வியத்திற்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை தாங்கள் இவ்விடம் விட்டுச் செல்லப் போவதில்லை எனப் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் தெரிவித்தனர். அத்துடன் மக்களின், பொது அமைப்புகளின் கோரிக்கைகள் அடங்கிய மகஜரும் உரிய பொது அமைப்புகளின் பிரதிநிதிகளால் வழங்கிவைக்கப்பட்டது.

மேற்படி அரச காணி தொடர்பில் அப்பிரதேசத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொது அமைப்புகளின் பயன்பாட்டிற்காக பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் அது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல், ஆதாய நோக்கம் கருதிய கட்டட நிர்மாண சங்கத்திற்கு தற்போதுதனை வழங்கியிருப்பதானது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத விடயம் என்ற விடயத்தைச் சுட்டிக்காட்டியே பொது அமைப்புகள் இப்போராட்டத்தை முன்னெடுத்திருந்தன.

இதனைத் தொடர்ந்து மாவட்ட செயலாளருடன் கலந்துரையாடி பின்னர் பிரதேச செயலாளர் குறிப்பிடுகையில் கூறியவை வருமாறு–

மேற்படி காணியில் உள்ள பெயர்ப் பலகை அகற்றப்படுமெனவும், அக்காணி வழங்கப்பட்ட விதம் மற்றும் இதர செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்குக் குழு ஒன்றை நியமித்திருக்கின்றார் எனத் தெரியப்படுத்தினார்.

ஆனாலும் இப்பிரசச்சினை தொடர்பில் உரிய நடவடிக்கை தற்போது இடம் பெற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கல்முனை விகாராதிபதி உட்பட மதத்தலைவர்கள் மற்றும் பொது மக்கள் பிரதேச செயலக முன்றிலில் முற்றுகையிட்டிருந்தனர்.

பின்னர் மாவட்ட அரசாங்க அதிபரிடமிருந்து அக்காணிக்காக வழங்கப்பட்ட அனுமதி இரத்துச் செய்யப்பட்ட கடிதம் கல்முனை வடக்கு பிரதேச செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டதையடுத்து போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஓட்டமாவடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 'கோப்பிரெஷ்' நிலையமும் கலாசார மண்டபமும்!

## கோலாகலமாக சம்பிரதாயபூர்வத் திறப்பு





ஓட்டமாவடி பல நோக்கு கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் நிறுவப்பட்டுள்ள புதிய 'கோப் பிரெஷ்' வர்த்தக நிலையம் மற்றும் கலாசார மண்டபம் ஆகியன திறந்து வைக்கப்பட்டன.

அரசாங்கத்தின் 'சுபிட்சத்தின் நோக்கு' கொள்கைத் திட்டத்திற்கமைவாக நாடளாவிய ரீதியில் 'கிராமத்துக்கு கிராமம் வீட்டுக்கு வீடு' எனும் விஷேட நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் புதிய 'கோப் பிரெஷ்' (COOP FRESH) வர்த்தக நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் வழிகாட்டலில் வினைத்திறன் மிக்க கூட்டுறவுச் சங்கங்களைத் தெரிவு செய்து இவ்வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகிறது.

'கிழக்கு மாகாணத்தில் கூட்டுறவு: அதன் தனித்துவமான பயணத்தை நோக்கி' எனும் தொனிப்பொருளில் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கமைவாக ஓட்டமாவடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கட்டடத்தில் நிறுவப்பட்டுள்ள புதிய கோப்பிரெஷ் வர்த்தக நிலையம் மற்றும் கலாசார மண்டபம் ஆகியன திறந்து வைக்கப்பட்டன.

ஓட்டமாவடி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் எம்.எம்.எம்.ஜெஸ்லின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் எம்.அஸ்மி ஆதம்லெப்பை, ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர், மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஏ.வி.தங்கவேல், ஓட்டமாவடி பிரதேசத்திற்கான கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எம்.ஏ.ஹாதி, கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது கூட்டுறவு முன்பள்ளி மாணவர்களினதும் மற்றும் பிரதேசக் கலைஞர்களினதும் கலை, கலாசார நிகழ்வுகளும் மேடையோற்றப்பட்டன. அதிதிகளும்கௌரவிக்கப்பட்டனர்.

கிராம மக்களுக்கு குறைந்த விலையில் அனைத்துப் பொருள்களையும் இலகுவான முறையில் விநியோகம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# மட்டு. அரச உத்தியோஸ்கத்தர்களுக்கு இராணுவத்தினரால் பூஸ்டர் தடுப்பூசி



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)
மட்டக்களப்பு,பெப்.11

மட்டக்களப்பு மாவட்டசெயலகத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கான கொவிட் 19 பூஸ்டர் தடுப்பூசி நேற்று இராணுவத்தினரால் ஏற்றப்பட்டது. பூஸ்டர் தடுப்பூசியாக பைசர் தடுப்பூசி கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் அரச உத்தியோகத்தர்களுக்காக மாவட்ட செயலகத்தில் ஏற்றப்பட்டது.

அக்காலப் பகுதியில் பூஸ்டர் தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ள தவறியவர்கள் மற்றும் கொரோனா வைரஸ் தாக்கத்திற்குட்பட்டு குறித்த காலத்தினை கடந்திராத அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கான தடுப்பூசியையே நேற்று இராணுவத்தினரால் ஏற்றப்பட்டது.

நாட்டில் கொரோனாப் பரவல் மேலும் அதிகரித்துவரும் நிலையில் ஒமிக்ரோன் தொற்றுக்குள்ளானவர்களே அதிகம் இனங்காணப்பட்டு வருகின்றனர் என சுகாதாரப் பிரிவுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. பொதுமக்கள் சுகாதார வழிமுறைகளை முற்றாகக் கடைப்பிடிப்பதுடன் பூஸ்டர் தடுப்பூசியை ஏற்றிக் கொள்வதனால் மாத்திரமே கொவிட் மரணங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும் எனவும் சுகாதாரப் பிரிவு மக்களை அறிவுறுத்தி வருகின்றது.

இதனடிப்படையில் அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பூஸ்டர் தடுப்பூசியை ஆர்வத்துடன் ஏற்றிக் கொள்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இது தவிர, மாவட்டத்தின் பல பாகங்களிலும் பொலிஸ் மற்றும் இராணுவத்தினரால் கொவிட் தடுப்பூசி ஏற்றிக் கொண்டமைக்கான அட்டைகள் பரிசீலிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் மொழி புறக்கணிக்கப்படும் நிகழ்வை புறக்கணிக்கின்றோம்!



## செல்வம் அடைக்கலநாதன்

வவுனியா பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள கல்வெட்டில் தமிழ் மொழிக்கு முன்னுரிமை வழங்காது சிங்களமொழி பொறிக்கப்பட்ட கல்வெட்டை முன்னுரிமைப்படுத்திய மையைக் கண்டிப்பதாகவும், இவ்வாறான தமிழ் மொழி புறக்கணிக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ளப்போவதில்லை என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில் மேலும் தெரிவித்தவை வருமாறு -

வவுனியா பல்கலைக்கழகததை சம்பிரதாயபூர்வமாக அறிவிக்கும் நிகழ்விற்கு ஜனாதிபதி இன்று கலந்துகொள்கிறார்.

இந்நிலையில் பல்கலைக்கழக வளாகத்தில் மூன்று மொழிகளிலும் தனித்தனியான கல்வெட்டுக்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இதனை ஜனாதிபதி திறந்து வைக்கவுள்ளார். இந்நிலையில் குறித்த இடத்தில் தமிழ் மொழியில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு முன்னுரிமைப்படுத்தப்பட்டு பல்கலைக்கழகத்தின் முகப்பு வாயிற் பகுதியை நோக்கியவாறு காணப்பட்டுள்ளது.

எனினும் அங்கு வந்த அதிகாரிகள் தமிழ்மொழியை பின்புறமாக அமைக்குமாறும் சிங்கள மொழியை முன்னுரிமைப்படுத்துமாறு கூறி கல்வெட்டை உடனடியாக இடமாற்றியுள்ளனர்.

ஜனாதிபதி சிங்கள மொழிக்கும், பௌத்தத்துக்கும் முன்னுரிமை என தேர்தலில் வெற்றி பெற்ற காலத்தில் இருந்தே தெரிவித்து வரும் நிலையில், அதன் ஒரு வடிவமாகவே இந்த செயற்பாட்டையும் நோக்க வேண்டியுள்ளது.

வடக்கு கிழக்கில் தமிழ் மொழி முன்னுரிமை என அரசமைப்பு ரீதியாகத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அண்மையில் வடக்கிற்கு வந்த நீதி அமைச்சரும் தமிழ் மொழிக்கு முன்னுரிமை எனத் தெரிவித்திருந்த நிலையிலும், இவ்வாறான ஒரு சம்பவம் பல்கலைக்கழக வளாகத்தில் அரங்கேறியிருப்பதை வன்மையாகக் கண்டிப்பதுடன் மேற்படி நிகழ்வில் கலந்துகொள்ளாது புறக்கணிப்பார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# வவுனியா பொது வைத்தியசாலையில் இன்று முதல் பி.சீ.ஆர் பரிசோதனை

வவுனியா பொது வைத்தியசாலையில் இன்று (வெள்ளிக்கிழமை) முதல் பி.சீ.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதுவரை காலமும் வவுனியா மாவட்டத்தின் பி.சீ.ஆர் பரிசோதனைக்காக மாதிரிகள் யாழ்ப்பாணம் மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களிற்கு அனுப்பப்பட்டு, அதற்குரிய முடிவுகள் பெறப்பட்டு வந்தன.

கடந்த ஆவணி மாதமளவில் மத்திய அரசால் வவுனியா வைத்தியசாலைக்கு 35 மில்லியன் ரூபா பெறுமதியான பி.சீ.ஆர். ஆய்வுகூட தொகுதி கொள்கையளவில் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிலையில் பல்வேறு தரப்பினரின் தீவிர முயற்சியின் பலனாக அதற்குத் தேவையான உபகரணங்கள் ஒவ்வொன்றாக தருவிக்கப்பட்டு இன்று (வெள்ளிக்கிழமை) முதல் வவுனியா பொது வைத்தியசாலையில் பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இது தொடர்பாக வவுனியா பொது வைத்தியசாலை பணிப்பாளரிடம் கேட்ட போது, மத்திய அரசினால் பி.சீ.ஆர். ஆய்வுகூடம் வழங்கி வைக்கப்பட்டிருப்பதன் மூலமாக வவுனியா மற்றும் வடமாகணத்தின் மற்றைய மாவட்டங்களுக்கும் இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

குறிப்பாக கடந்த காலங்களிலே உயிரிழந்தவர்கள் மீதான பி.சீ.ஆர். பரிசோதனைகள் மற்றும் ஏனைய பி.சீ.ஆர். பரிசோதனைகள் யாழ். போதனா வைத்தியசாலை அல்லது அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், அந்த முடிவுகள் பெறுவதற்கு பெரும் கால தாமதம் ஏற்பட்டிருந்தது.

இதன் காரணமாக வைத்திய குழாம், நோயாளர்கள் மற்றும் உறவினர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

இதனைக் கருத்திற்கொண்டு வவுனியா பொது வைத்தியசாலையின் பிசீஆர் ஆய்வுகூடமூடாக முதற்கட்ட பணியாக உயிரிழந்தவர்களுக்கான பி.சீ.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதோடு, தீவிர நோயாளிகளுக்கான பி.சீ.ஆர் பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டவுள்ளன என அவர் தெரிவித்தார்.

மேலும், ஆய்வுகூடத் தொகுதியை வவுனியா மாவட்ட பொதுவைத்தியசாலையில் இயங்குநிலைக்கு கொண்டுவர உதவிய மத்திய சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சுகாதார திணைக்கள அதிகாரிகளுக்கு நன்றியை தெரிவித்த அவர் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் (ஆய்வுகூடம்) வைத்தியர் சுதத் தர்மாரட்ணவுக்கும் தனது விசேட நன்றியைதெரிவித்துக்கொண்டார்.

# அரச கடன் மற்றும் கடன் சேவைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு ரணில் கோரிக்கை!



அரச கடன் மற்றும் கடன் சேவைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பொதுக் கணக்குகளுக்கான குழுவிடம் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றம் கூடும் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் இந்த அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அவர் நேற்று (வியாழக்கிழமை) நாடாளுமன்றில் கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்றம் என்பது மாநில நிதிகளை கட்டுப்படுத்தும் அமைப்பாகும் என்றும் தாங்கள் பலமுறை தகவல்களைக் கோரியுள்ளார் எனவும் எனினும் வழங்கப்படவில்லை என்று அவர் கூறினார்.

இலங்கையின் கையிருப்பு ஒரு பில்லியன் டொலருக்கும் கீழ் வீழ்ச்சியடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது என அவர் இதன்போது குறிப்பிட்டார்.

மேலும் நாட்டின் பொருளாதார நெருக்கடி தொடர்பாக இலங்கைப் பிரதிநிதியுடனான சந்திப்பின் பின்னர் சர்வதேச நாணய நிதியம் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கை தொடர்பில் விவாதம் நடத்துமாறு விக்கிரமசிங்க மீண்டும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

சர்வதேச நாணய நிதியம் பின்பற்றும் விதிமுறைகளின்படி, மூன்று வாரங்களில் நடைபெற்ற விவாதங்கள் தொடர்பாக அறிக்கையை சமர்ப்பிக்கும் என்றும் அதன்படி, மார்ச் மாதத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையின் மீதான விவாதத்தை நடத்த முடியும் என்று சுட்டிக்காட்டிய அவர், எனவே திகதியைத் திட்டமிடுவது தொடர்பாக அரசாங்கத்திடம் அவர் கோரினார்.

இதனையடுத்து கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போது இந்த விடயம் முன்வைக்கப்படும் என அவைத் தலைவரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் கடற்படைத் தளபதியுடன் சந்திப்பு



இலங்கைக்கான புதிய பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர், மேஜர் ஜெனரல் (ஓய்வு) உமர் பாரூக் புர்கி நேற்று (வியாழக்கிழமை) கடற்படைத் தலைமையகத்தில் இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிராந்த உலுகே தென்னவை சந்தித்தார்.

பெப்ரவரி 2 ஆம் திகதி அன்று இலங்கைக்கான பாகிஸ்தானின் புதிய உயர்ஸ்தானிகராக மேஜர் ஜெனரல் (ஓய்வு) உமர் பாரூக் புர்கி நியமிக்கப்பட்டதன் பின்னர் கடற்படைத் தளபதியுடனான மேற்கொண்ட முதல் உத்தியோகபூர்வ சந்திப்பு இதுவாகும்.

இதற்கிடையில், கடற்படைத் தளபதி பாகிஸ்தான் உயர்ஸ்தானிகருக்கு புதிய நியமனத்தின் பொறுப்பான கடமைகளை வெற்றிகரமாகச் செய்தமைக்காக தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

அவர்களுக்கிடையிலான கலந்துரையாடலில் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல விடயங்கள் மற்றும் கடற்படைத் தளபதியின் பாகிஸ்தானுக்கான உத்தியோகபூர்வ விஜயம் தொடர்பான சில விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டன. மேலும், நிகழ்வைக் குறிக்கும் வகையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கேர்ணல் முஹம்மட் சப்தர் கானும் கலந்துகொண்டார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.02.2022இல் வெளியிடப்பெற்றது.